Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 17 (02 - 09 - 1991) திங்கட்கிழமை ஓசை: 196

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பி. பி. ஸி. செயற்படுகின்றதாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து பி. பி ஸி செய்திகளையும், நிகழ்ச்சிகளையும தயாரித்து ஒலிபரப்பி வருகிறது என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சமரசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார் இது குறித்து பி பீ ஸிக்குத் தாம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் இதேநேரம் உலகிலுள்ள வானொலி, தொலைக்காட்சி நிலையங்களினால் இலங்கைக்கு எதிராக ஒலிபரப்பப்படும் பிழையான செய்திகளுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உலகசேவை, ஆசியசேவை மற்றும் கொழு (4 ஆம் பக். பார்க்க)

# கொழும்பு நகர்பகுதி எங்கும் பதற்றம்

# அரசியல் நெருக்கடி தீவிரமடைகிறது

## கூட்டங்கள் ஊர்வலங்க்ள் நடத்த அதிருப்தியாளர் ஏற்பாடு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்த அதிருப்தியாளர்களும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்து தமது பிரேரணையைமக்களுக்குவிளங்க வைக்கவும, ஆதரவு திரட்டவும் பெரும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்துவதற்கு திட்டமிட்டு வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை கொழும்பில் அரச ஆதரவாளர்களுக்கும், அதிருப்தியாளர்களுக்கும் இடையில் மோதல்கள் வெடிக்கக் கூடிய பதற்ற நிலையும் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியும், வானொலியும், பத்திரிகைகளும் அரசிற்குச் சொந்தமான பத்திரிகைகளும் தமது நிலைகளை எடுத்துக் கூறி விளக்குவதற்கு சந்தர்ப்பம்அளிக்கவில்லை !என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளோம் என்றார்.

இந்த மனு என்ன என்பதை மக்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அதே வேளை மனுவிற்கு எதிராக அரச பொதுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆகையினால் நாம் மனு என்ன என்பதை விளக்கி துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதுடன் பொதுக்கூட்டங்களையும் நடாத்தவுள்ளோம் என்றார்.

அதேவேளை கொழும்பு நகர்ப்பகுதியில் பெரும் சுவரொட்டிப் போரும் அதைத் தொடர்ந்து பதற்ற நிலையும் உருவாகி வருகின்றது. கோஷ்டி மோதல்கள் எப்பவும் வெடிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிரேரணையை விளக்கி நாடெங்கும் கூட்டம் - சிறிமாவோ

(கொழும்பு)

ஜனாதிபதி அதிகார முறையை மாற்றியமைத்து பலம் வாய்ந்த பாராளுமன்றம் ஒன்றை அமைப்பதுதான் எமது போராட்டத்தின் நோக்கம். திரு பிரேமதாசா தமது பதவியை இராஜினாமாச் செய்வது என்பதுதான் எமது ஆலோசனை என்று சிறிமாவோபண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

### ஐந்தும் ஒன்றும்

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனு சம்பந்தமாக சிறிமாவோ குறிப்பிடும்போது ஐந்து தமிழ் எம்பிகளும் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் எம்பியும் (4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு அமைச்சர் பதவி இராஜினாமா

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அமைச்சரவையில் இருந்து மேலும் ஓர் அமைச்சர் இராஜினாமாச் செய்துள்ளார்.

கட்டட, கட்டட மூலப் பொருள் அமைச்சர் சந்திரரணதுங்காவே தனதுபதவியை இராஜினாமாச்செய்த அமைச்சராவார். ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனு சபாநாயகரிடம் கையளிக்கப் பட்டதையடுத்து (4ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாணசபை பிரேமாவிற்கு ஆதரவு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிற்கு ஆதரவு தெரிவித்து வடமேல் மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

நேற்று வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜெய (4ஆம் பக்கம் பார்க்க)

## அஜந்தனுக்கு மக்கள் அஞ்சலி

மணலாற்றில் கடந்தவியாழக்கிழமை வீரமரணமடைந்த அஜந்தன் (மதியாபரணம் தவகாந்தன் கலைமகள் வீதி, அரியாலை) என்ற போராளியின் புகழுடல் நேற்று முன்தினம் காலை 11-30 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்பட்டபோது நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர். பின்னர் போராளியின் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப் பட்டது. (11)

## முகமதுவிற்கு மக்கள் அஞ்சலி

(கொடிகாமம்)

ஆனையிறவு இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை முகமது (விநாயகமூர்த்தி ஜெயபாலன் அரசன் கேணி, பளை) என்பவரின் புகழுடல்வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பளை வேம்படு கேணி மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதன் பின்பு அஞ்சலிக்கூட்டம் நடை (4ஆம பக்கம் பாரக்க)

## வன்முறையை தூண்ட அரசு ராணுவத்தை நாடியுள்ளது - லலித்அத்துலத்முதலி

(கொழும்பு)

நாட்டில் அரசு சார்பாக வன்முறையைக் கட்டவிழ்த்து விட அரசு இராணுவ அதிகாரிகளை அணுகியிருப்பதாக

லலித் அத்துலத் முதலி மேலும் கூறுகையில் இராணுவம் அரசைக் கைப்பற்றும் சாத்தியம் இல்லையென்றும், இராணுவமும், பொலிசாரும் சட்

## ஊரடங்கு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, ...

# ஐ. தே. கட்சியைத் தூய்மைப்படுத்த கட்சியிலிருந்தே போராடுவோம்

## ஐ. தே. கட்சியில் உள்ளபிரேமதாசா அதிருப்தியாளர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி

"சீர்திருத்தப் போகிறேன்" ஐக்கிய தேசியக் கட்சி உண்

யைச் சரியான வழியில் நடத்த வேண்டியது முக்கியமா

புரிமைகளைப் பயன்படுத்தி அரசியல் அமைப்பிற்கிணங்க

## கூட்டங்கள் ஊர்வலங்க்ள் நடத்தஅதிருப்தியாளர்ஏற்பாடு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்த அதிருப்தியாளர்களும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்து தமது பிரேரணையைமக்களுக்குவிளங்க வைக்கவும், ஆதரவு திரட்டவும் பெரும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்துவதற்கு திட்டமிட்டு வருவதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை கொழும்பில் அரச ஆதரவாளர்களுக்கும், அதிருப்தியாளர்களுக்கும் இடையில் மோதல்கள் வெடிக்கக் கூடிய பதற்ற நிலையும் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியும், வானொலியும், பத்திரிகைகளும் அரசிற்குச் சொந்தமான பத்திரிகைகளும் தமது நிலைகளை எடுத்துக் கூறி விளக்குவதற்கு சந்தர்ப்பம்அளிக்கவில்லை !என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளோம் என்றார்.

இந்த மனு என்ன என்பதை மக்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அதே வேளை மனுவிற்கு எதிராக அரச பொதுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆகையினால் நாம் மனு என்ன என்பதை விளக்கி துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதுடன் பொதுக்கூட்டங்களையும் நடாத்தவுள்ளோம் என்றார்.

அதேவேளை கொழும்பு நகர்ப்பகுதியில் பெரும் சுவரொட்டிப் போரும் அதைத் தொடர்ந்து பதற்ற நிலையும் உருவாகி வருகின்றது. கோஷ்டி மோதல்கள் எப்பவும் வெடிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிரேரணையை விளக்கி நாடெங்கும் கூட்டம்

### - சிறிமாவோ

(கொழும்பு)

ஜனாதிபதி அதிகார முறையை மாற்றியமைத்து பலம் வாய்ந்த பாராளுமன்றம் ஒன்றை அமைப்பதுதான் எமது போராட்டத்தின் நோக்கம். திரு பிரேமதாசா தமது பதவியை இராஜினாமாச் செய்வது என்பதுதான் எமது ஆலோசனை என்று சிறிமாவோபண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

**ஐந்தும் ஒன்றும்**

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மனு சம்பந்தமாக சிறிமாவோ குறிப்பிடும்போது ஐந்து தமிழ் எம்பிகளும் ஒரு முஸ்லிம் காங்கிரஸ் எம்பியும்

(4ஆப் பக்கம் பார்க்க)

## வன்முறையை தூண்ட அரசு ராணுவத்தை நாடியுள்ளது

### - லலித்அத்துலத்முதலி

(கொழும்பு)

நாட்டில் அரசு சார்பாக வன்முறையைக் கட்டவிழ்த்து விட அரசு இராணுவ அதிகாரிகளை அணுகியிருப்பதாக முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்

ஜனாதிப பிரேமதாசாவை பதவி நீக்கம் செய்யும் சாத்தியக்கூறுகள் அதிகரிப்பதால் அரசே வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் சாத்தியம் இருப்பதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

லலித் அத்துலத் முதலி மேலும் கூறுகையில் ஆராணுவம் அரசைக கைப்பற்றும் சாத்தியம் இல்லையென்றும், இராணுவமும், பொலிசாரும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உறுதி கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமர் டி. பி. விஜபதுங்க பிரேமதாசா அரசுக்கு நூற்றுப் பதினாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகக் கூறியுள்ளார். ஆனால் லலித் அத்துலத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, செட்டிகுளம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நேற்று நண்பகல் ஒன்று நாற்பத்தைந்து முதல் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்படுவதாக கூட்டுப்படைகளின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இதனால் காட்டுப் பாதைகளும் பொதுப்பாதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு அமைச்சர் பதவி இராஜினாமா

(கொழும்பு)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அமைச்சரவையில் இருந்து மேலும் ஓர் அமைச்சர் இராஜினாமாச் செய்துள்ளார்.

கட்டட, கட்டட மூலப் பொருள் அமைச்சர் சந்திரரணதுங்காவே தனதுபதவியை இராஜினாமாச்செய்த அமைச்சராவார். ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனு சபாநாயகரிடம் கையளிக்கப் பட்டதையடுத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடமேல் மாகாணசபை பிரேமாவிற்கு ஆதரவு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிற்கு ஆதரவு தெரிவித்து வடமேல் மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

நேற்று வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜெய

(4ஆம் பக்கம் பார்க்க)

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர். பின்னர் போராளியின் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப் பட்டது. (11)

## முகமதுவிற்கு மக்கள் அஞ்சலி

(கொடிகாமம்)

ஆனையிறவு இராணுவத்துடன் நேரடி மோதலிலவீரமரணமடைந்த வீரவேங்கை முகமது (வினாயகமூர்த்தி ஜெயபாலன் அரசன் கேணி, பளை) என்பவரின் புகழுடல்வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பளை வேம்படு கேணி மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதன் பின்பு அஞ்சலிக்கூட்டம் நடை

(4ஆம் பக்கம் பாரக்க)

# ஐ. தே. கட்சியைத் தூய்மைப்படுத்த கட்சியிலிருந்தே போராடுவோம்

## ஐ. தே. கட்சியில் உள்ளபிரேமதாசா அதிருப்தியாளர்கள்

(கொழும்பு)

"ஐக்கிய தேசியக் கட்சியைத் தூய்மைப்படுத்துவதற்கான ஒரு போராட்டத்தை கட்சிக்குள்ளிருந்தே நடத்தப் போகிறோம் ஐ தே கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எம்முடன் இணைந்து போராடவேண்டும். நாட்டின் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டே எமது போராட்டம் அமையும். எதற்கும் அஞ்சத் தேவையில்லை'' என்று முன்னைநாள் பாதுகாப்பு அமைச்சரும் அண்மையில் கல்வி அமைச்சராய் இருந்து தனது பதவியை இராஜினாமாச் செய்த லலித் அத்துலத்முதலியும் காமினி திஸநாயக்காவும் இணைந்து அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

**ஐக்கியதேசியக் கட்சி**

**"சீர்திருத்தப் போகிறேன்''**

ஐக்கிய தேசியக் கட்சி உண்மையான வழியிலிருந்து விலகத் தொடங்கிவிட்டது. பழைமை வாய்ந்த இக்கட்சியைச் சரியான வழியில் நடத்த வேண்டியது முக்கியமாகும் எனவே அமைச்சர் பதவியிலிருந்து விலகி கட்சிக்குள் இருந்தபடி எனக்குள்ள சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி அரசியல் அமைப்பிற்கிணங்க போராட்டம் நடத்த உள்ளேன் என லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

**பயந்த காலம் மலையேறிவிட்டது**

ஒரு தனி நபருக்கெதிராக இப்போராட்டம் அமையாது

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஐவர் கைது; உடைமைகள் சேதம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஐந்து தமிழர்கள் கைது செய்யப்பட்டதோடு பொதுமக்களுக்குச் சொந்தமான நான்கு வீடுகளும், இரண்டு உழவு இயந்திரங்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ள

4ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் வன்முறை, பணப்பறிப்பு

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாட்களாக இப்பகுதியில் வியாபாரத்திற்காகச் சென்ற பத்து வியாபாரிகளிடமிருந்து முழுப்பணத்தையும் இராணுவத்தினர் பறித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் தாக்குதல்

யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலால் இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இச் சம்பவம் நேற்று முன்தினம இரவு 10-30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து நள்ளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். அரசியலமைப்பிற்கு பிரேமதாசா பாராட்டு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் விவேகமான ஒரு நடவடிக்கையே இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை என்று சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பிரேமதாசா,

1931 ஆம்ஆண்டுடொனமூர் அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசசபைஅதன் பின்னர் சட்டசபை, பாராளுமன்றம் ஆகியவற்றில் அங்கத்தவராகவும், நாட்டின் நிர்வாகியாகவும் இருந்த ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அனுபவ ரீதியான நடவடிக்கையேநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத்தீர்வை குழப்பும் முயற்சி

### - தொண்டமான்

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழும் தமிழ் சிறுபான்மை மக்களது பிரச்சினையை தெரிவுக்குழு மூலம் தீர்ப்பதற்கான நல்லதொரு சூழ்நிலை தோன்றி வரும் வேளையில் அதைக் குழப்பும் முயற்சியாகவே ஜனாதிபதிக்கு எதிரான நடவடிக்கை அமைந்திருக்கிறது.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றக் குழு கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்றக் குழு பாராளுமன்றத்தில் கூடுவதற்குப் பதிலாக இன்று ஜனாதிபதி உத்தியோக பூர்வ அலுவலகத்தில் கூடவுள்ளது.

இதைக் குற்றச் சாட்டு மனுவில் கையெழுத்திட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் கண்டித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் பதவியிலிருந்து விலகிய அத்துலத்முதலி நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இத்தகைய நேர்மையற்ற நடவடிக்கைகளால் தான் அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுத் தாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான் குடியில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி நகரத்தின் கட்டடங்கள் அதிகமுள்ள பகுதியில் கார்க் குண்டு ஒன்று வெடித்துள்ளது நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
யாழ்ப்பாணம் / பேராதனை

## பல்கலைக்கழகம்

கல்வியாண்டு 1991/1992

- கலை முதற்தேர்வு **G. A. Q.**
- வர்த்தக முதற்தேர்வு **1st in Com.**
- விஞ்ஞான முதற் தேர்வு **G. S. Q.**

ஆகிய பாடநெறிகளுக்கான பதிவுகளை 10-09-91க்கு முன் பதிவுசெய்து கொள்ளலாம்.

A/L இல் 3 பாடங்கள் சித்தியெய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

- விரிவுரைகள் யாவும் 14.09.91 அன்று ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

நிர்வாகி,
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளச் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3017)


## மனமுவந்து மகிழ்வுடன் களம் அனுப்பும் பெற்றோர்

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் போராட்டக்களத்திற்கு தமது பிள்ளைகளைத் தாமாகவே முன்வந்து மகிழ்வுடன் அனுப்பி வைக்கும் நிகழ்வுகள் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் தொடர்கின்றன.

கடந்த 23 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த பூபதி என்பவர் தனது மகளை களம் அனுப்பியுள்ளார். பூநகரியைச் சேர்ந்த சின்னையா என்பவர் தனது மூன்றாவது மகளையும் களத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

## விபத்தில் ஒருவர் காயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியில் கண்டி வீதிவழியாக வந்து கொண்டிருந்த சயிக்கிலும் வான் ஒன்றும் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் சயிக்கிள் ஓட்டுனர் காயமடைந்தார்.

ச. இராசன் (வயது 17) தவசிக் குளத்தைச் சேர்ந்த இவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். (86)

## போல்டிக் குடியரசுகளுடன் அமெரி. ராஜதந்திர உறவு

(வாஷிங்டன்)

மூன்று போல்டிக் குடியரசுகளுடனும் ராஜரீக உறவுகளை ஏற்படுத்த வாஷிங்டன் முன்வந்துள்ளது.

லுத்துவேனியா, லித்வியா, எஸ்தோனியா குடியரசுகளுக்கு வரும் திங்களன்று ராஜதந்திரிகளை அனுப்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதேவேளை போல்டிக் குடியரசுகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி புஷ் ரஷ்ய பாராளுமன்றத்தைக் கேட்டுள்ளதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 28 — 03 — 1972



மண் மீட்பில் 20 — 07 — 1991

### வீரவேங்கை தர்சினி
### (அருளம்பலம் றஞ்சினி)

உருத்திரபுரம்.

(கட்டைக்காட்டில் 20-07-1991 அன்று ஆகாய, கடல் வெளித் தாக்குதலில் நேரடி மோதலில் வீரமரணம்)

உயிரற்ற உடலைப் பார்த்ததும் மகளே
உயிரே போனது மகளே!
என்றாலும் மகளே உனதுடலைப் பார்த்தபின்
நெஞ்சம் தணிந்தது மகளே!

புறமுதுகு காட்டாமல் போரிட்டு அங்கே
புகழ்மாலை சூடினாய் பெண்ணே!
வீரத்தாய் என்றோ விளக்கினாய் மகளே
வேதனையால் வாடுகிறோம் மகளே!

இன்று (02-09-1991) வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல: 52 D - 10,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

திரு திருமதி அருளம்பலம்
குடும்பத்தினர்

(R-1673)



## நினைவு கூருகின்றோம்...



1991 - 09 - 02

2ஆம் லெப். கனோஜி

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் பண்டிவிரிச்சானில் தேசவிரோதிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட

**டென்சில்** (சூசைமனுவல் மிக்கேல் தட்சணா மருதமடு)

1989 ஆம் ஆண்டு கொற்றாவத்தையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். சூரன்** (அருணாசலம் சுரேந்திரதேவர் – யாழ்ப்பாணம்)

கரவெட்டி ஆண்டான் வளவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட இராஜகிராமத்தைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**நித்தி** (சுப்பிரமணியம் சிவகுமார் – காந்திகிராமம் கோணாவில், கிளிநொச்சி)
**ஆப்தீன்** (பாலசிங்கம் மோகனதாஸ் - மந்திப்புலம், கொக்குவில்)
**2ஆம் லெப். கனோஜி** (பாலகிருஸ்ணன் கமலநாதன் - புளியம்பொக்கணை)
**துஷ்யந்தன்** (சின்னராசா உதயராசா - சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை)
**சாள்ஸ்** (வேலுப்பிள்ளை கந்தசாமி - இல 89, பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்)
**2ஆம் லெப் அசோக்** (மகாலிங்கம் இதயச்சந்திரன் – 11, ஒட்டுமடம்வீதி, மானிப்பாய்)
**சிவராஜ்** (தங்கத்துரை அன்ரனிதாஸ் - கிண்ணியா, திருக்கோணமலை)
**கில்மன்** (அரியரத்தினம் ஜீவரத்தினம் - பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை)
**லெப். அன்ரனி / சிவா** (கனகசபாபதி கனகராஜ் - 30 ஆம் வீட்டுத்திடல், விநாயகபுரம், துணுக்காய்)
**நிரேஷ்** (செல்வராசா சிறிதரன் - கொக்கிளாய்)
**சஞ்சீவி** (சிவலிங்கநாதன் சிவசங்கர் - வேலணை, ஊர்காவற்றுறை)
**2ஆம் லெப். வசி** (சுப்புரமணியம் கனகேஸ்வரன் - 2ஆம் யூனிற், வவுனிக்குளம், துணுக்காய்)
**2ஆம் லெப். சாரதி** (இரத்தினம் கேதீஸ்வரன் - 12 ஏ 2 ஆம் யூனிற்,



## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



### லெப்- இளஞ்செழியன் (வாஞ்சி)

[யோ. அரவிந்தன்]

வீரப்பிறப்பு வீரமரணம்



## 45-ம் நாள் நினைவலைகளுடன்
## ஆத்ம சாந்திப் பூசையும்

மண்ணில் 17



மண்மீட்பில் 20

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(B/3017)

---

45-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



### லெப்- இளஞ்செழியன் (வாஞ்சி)

[யோ. அரவிந்தன்]

வீரப்பிறப்பு 3.9 1973 — வீரமரணம் 21 7.1991

வீரப் புலி மண்ணில்
வீழ்ந்திடா தென்பதை
ஆயுமுடன் உணர்த்திட
வேழமுடன் மோதி...
புல்லா வெளியில- உன்கையால்
அள்ளினாய் ஆயுதங்கள்!
வெள்ளமென உன வீரம்
வீறுடன் ஓடுது பார்...
கள்ளமில்லாக் கண்மணியே!
எத்தனை பிறப்பிலும்
புலியெனவே பிறவடா- மற
மண்ணைக் காக்க!

நாளை (3-9-91) நடைபெறவிருக்கும் அந்தியேட்டி நிகழ்வில் இயக்க உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்கள், அறிந்தவர்கள் எல்லோரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(3:9.91 அன்று தான் இவரின் பிறந்த தினமும் ஆகும்.)

(செல்வச்சன்னதி- வல்லைவீதி
மயிலியதனை,
தொண்டமானாறு

இவ்வண்ணம்
கவிஞர் வஞ்ஞெநாதனின்
குடும்பத்தினரும்,
உறவினரும்.

(B/3041)

---

வீரவேங்கை [illegible]

## (அருளம்பலம் றஞ்சினி)

உருத்திரபுரம்.

(கட்டைக்காட்டில் 20-07-1991 அன்று ஆகாய, கடல் வெளித் தாக்குதலில் நேரடி மோதலில் வீரமரணம்)

உயிரற்ற உடலைப் பார்த்ததும் மகளே
உயிரே போனது மகளே!
என்றாலும் மகளே உனதுடலைப் பார்த்தபின்
நெஞ்சம் தணிந்தது மகளே!

புறமுதுகு காட்டாமல் போரிட்டு அங்கே
புகழ்மாலை சூடினாய் பெண்ணே!
வீரத்தாய் என்றோ விளக்கினாய் மகளே
வேதனையால் வாடுகிறோம் மகளே!

இன்று (02-09-1991) வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல: 52 D - 10,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

திரு திருமதி அருளம்பலம்
குடும்பத்தினர்

(R-1673)

---

45-ம் நாள் நினைவலைகளுடன்

## ஆத்ம சாந்திப் பூசையும்

| மண்ணில் | | மண்மீட்பில் |
|---|---|---|
| 17 | | 20 |
| 09 | | 07 |
| 1972 | | 1991 |



### வீரவேங்கை யூலியற்
### (மரியதாஸ் ஆன் அனுசூயா)
### (லதா)

வீட்டுக்குள் முடங்கி
விளக்கினைச் சுற்றி ஆடும்
விட்டில் பூச்சி வாழ்க்கையினை
வெறுத்து —
பெரியதொரு விடியலுக்காய்
சிறகடித்துப் பறந்தவள் இவள்
ஆனையிறவுப் பெரும் போரில்
இன்னுயிர் நீத்தாள்
சுதந்திரம் விரும்பும்
எல்லோர் மனதிலும் இவள்
சுவாசமாய் வாழ்வாள்

40, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.
(R/1683

உன் நினைவில் வாடும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

---

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் பண்டிவிரிச்சானில் தேசவிரோதிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட

**டென்சில்** (சூசைமனுவல் மிக்கேல் தட்சணா மருதமடு)

1989 ஆம் ஆண்டு கொற்றாவத்தையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். சூரன்** (அருணாசலம் சுரேந்திரதேவர் - யாழ்ப்பாணம்)

கரவெட்டி ஆண்டான் வளவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட இராஜகிராமத்தைச் சேர்ந்த சிற்றூர்திச் சாரதியான தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**நித்தி** (சுப்பிரமணியம் சிவகுமார் - காந்திகிராமம் கோணாவில், கிளிநொச்சி)
**ஆப்தீன்** (பாலசிங்கம் மோகனதாஸ் - மந்திப்புலம், கொக்குவில்)
**2ஆம் லெப். கனோஜி** (பாலகிருஸ்ணன் கமலநாதன் - புளியம்பொக்கணை)
**துஷ்யந்தன்** (சின்னராசா உதயராசா - சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை)
**சாள்ஸ்** (வேலுப்பிள்ளை கந்தசாமி - இல 89, பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்)
**2ஆம் லெப் அசோக்** (மகாலிங்கம் இதயச்சந்திரன் - 11, ஓட்டுமடம்வீதி, மானிப்பாய்)
**சிவராஜ்** (தங்கத்துரை அன்ரனிதாஸ் - கிண்ணியா, திருக்கோணமலை)
**கில்மன்** (அரியரத்தினம் ஜீவரத்தினம் - பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை)
**லெப். அன்ரனி/ சிவா** (கனகசபாபதி கனகராஜ் - 30 ஆம் வீட்டுத்திடல், விநாயகபுரம், துணுக்காய்)
**நிரேஷ்** (செல்வராசா சிறிதரன் - கொக்கிளாய்)
**சஞ்சீவி** (சிவலிங்கநாதன் சிவசங்கர் - வேலணை, ஊர்காவற்றுறை)
**2ஆம் லெப். வசி** (சுப்புரமணியம் கனகேஸ்வரன் - 2ஆம் யூனிற், வவுனிக்குளம், துணுக்காய்)
**2ஆம் லெப். சாரதி** (இரத்தினம் கேதீஸ்வரன் - 12 ஏ 2 ஆம் யூனிற், வவுனிக்குளம்)

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துப் பொதிகளை படகில் ஏற்றி வந்து கொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினர் நெருங்கி வந்த நிலையில் படகினை வெடிக்கவைத்து வீரமரணமெய்திய கடற்புலி

**கப்டன் மோகன்** (கா. நகுலேஸ்வரன் - நெடியகாடு, வல்வெட்டித்துறை)

முல்லைத்தீவு, வி. டபிள்யூ சந்தியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**லெப். பொஸ்ரின்** (காளியப்பன் சுந்தரராஜ் - 9 ஆம் கட்டை, உயிலங்குளம்)

பாலம் போட்டாறில் சிறிலங்காப் படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**சுமிந்தன்** (வீரவாகு விஜயகுமார் - வர்ணமேடு, தம்பலகாமம்)
**கபில்** (வாசுதேவன் பரமேஸ்வரன் - தம்பலகாமம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த

**கப்டன் ரவி** (மாசிலாமணி ரவிச்சந்திரன் - தையிட்டி, காங்கேசன்துறை)
**சின்னஅக்காச்சி** (பஞ்சாட்சரம் தயானந்தன் - நீர்வேலி தெற்கு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3043)

### சிந்தனைக்கு

நிகழ்காலம் பிரிவதற்குமுன், வெகுவிரைவில் எதிர்காலம் வந்து சேர்கிறது.

— எஸ்பல்பெண்டிடேபிவ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 02-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் [illegible]

## சிறிலங்கா அரசியலில் பிரேமாவின் எதிர்காலம்?

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு சிறிலங்கா அரசியலின் ஸ்திரத் தன்மையை வெகுவாகக் குலைத்துள்ளது. கடந்தகால ஜே. வி. பி. கிளர்ச்சியின் போது ஆயுத முனையில் ஏற்படுத்தப்பட்ட ஸ்திரமின்மையை விடவும் உயர்ந்தளவு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதெனவும் கூறலாம்.

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதியால் அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்டு, எதிர்க்கட்சிகள் சிதறடிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட இந்த அரசியல் ஸ்திரணம் தற்போது ஐ. தே. கட்சியில் உள்ள அதிருப்தியாளர்களால்குலைக்கப்பட்டுள்ளது. சிறிலங்காஅரசியலில் ஐ. தே. கட்சியின் ஸ்திரணத்தன்மைக்கு வெளியில் இருந்து எவரும் சவால் விடமுடியாது என்ற நிலை இருந்த போது உள்வீட்டு விவகாரம் அதன் ஸ்திரணத்தன்மையைக் குலைத்துள்ளது எனலாம்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தற்பொழுது தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் மூலம், மக்கள் தொடர்பு சாதனங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிலவேளை வெற்றி கொண்டு விடக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் எதிர்காலத்தில் அவரது அரசியல் வாழ்வு நெருக்கடியற்றதாக இருக்கும் என்று மட்டும் கூறிவிடமுடியாது.

ஐ தே. கட்சி எப்பொழுதும் நகர மக்களின் செல்வாக்கினால் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த கட்சியாகும். அக்கட்சியின் நகர்ப்புறச் செல்வாக்கை 1970 தேர்தலில் ஐ. தே. கட்சி படுதோல்வி அடைந்த போது கொழும்பு நகர்ப்பகுதியில் அது தோல்வி அடையாமையைக்கொண்டு புரிந்து கொள்ளலாம். தற்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் வீடமைப்பு திட்டங்கள் கிராமப்புறத்தில் அவருக்கு செல்வாக்கைத் தேடிக் கொடுத்திருப்பினும், ஜே. வி. பி. இளைஞர்கள் என்ற போர்வையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் அவரது செல்வாக்கைப் பெரிதும் பாதித்துள்ளன.

இந்நிலையில், லலித் அத்துலத் முதலி, பிரேமதாசாவிற்கு எதிராக செயற்படுதல் என்பது நகர்ப்புற குறிப்பாக கொழும்பில் அவரது செல்வாக்கைப் பாதிக்கக் கூடும். கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அதிகூடிய வாக்குவித்தியாசத்தில் லலித் வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையினால் பிரேமதாசாவின் பிரதான வாக்கு வங்கியான கொழும்பு நகர்ப்புறத்தை பெரிதும் பாதிக்கும். தற்பொழுதே கொழும்பு நகர்பகுதியில் சுவரொட்டிப் போரில் இருபகுதியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆகையினால் இன்று சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை அவர் ஏதோ ஒரு வழியில் சமாளித்துக் கொண்டாலும், எதிர்வரும் தேர்தலில் அவரது நிலைமை பெரும் நெருக்கடிக்கு உரியதாகவே இருக்கும்.

# லலித் குழுவின் பூமராங்

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கி, பாராளுமன்றத்தின் மூலம் பிரதம மந்திரி தலைமையிலான ஆட்சி முறையை கொண்டுவர வேண்டும்'' என்கிறார் லலித்அத்துலத்முதலியும், அவரது பரிவாரத்தினரும்.

"ஜனாதிபதி ஆட்சிமுறை ஒரு பரீட்சார்த்தமே, ஆதலினால் அதனைக் கைவிட்டு பிரதம மந்திரி தலைமையிலான ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வரலாம்'' என்று கடந்த ஆண்டு திருவாய் மொழிந்தார் ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

"ஜனநாயக மீட்புக்காகப் போராடுவோம்'' என்று ஐ. தே. க. எம்பிக்கள் பலர் இன்று முழங்குகின்றனர்.

"தனிமனித சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தைப் பாதுகாப்போம்'' என்கிறார் சிறிமா அம்மையார்.

"ஜனாதிபதி முறைமை தனிமனித எதேச்சாதிகாரத்தை உருவாக்குகிறது'' என்று 1978 ஆம் ஆண்டு என். எம். பெரேரா புதிய அரசியல் திட்டத்தைப்பற்றிய விமர்சனப் பார்வை என்ற நூலில் எழுதினார்.

ஆனால் இங்கு விசித்திரம் என்னவென்றால் தான் பதவியில் இல்லாத காலத்தில்தான் தனது ஜனாதிபதி முறைமை பிழையானது என்று ஜே. ஆர். கூறுகின்றமையும், ஜே. ஆர். பதவியில் இருந்தபோது ஜே. ஆரின் ஜனாதிபதி முறைமையை முண்டுகொடுத்து காத்துவந்த முக்கிய நண்பர்களான லலித்தும், காமினியும் இப்போது பிரேமா பதவியில் இருக்கும் போது அந்த முறை பிழையானது எனக் கூறுவதுமாகும்.

பிரெஞ்சு ஜனாதிபதியாக இருந்த டீகோல் என்பவரைப் பின்பற்றி ஜே. ஆர். இலங்கையில் ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்தார். பிரான்சில் கொம்யூனிஸ்டுக்களின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு அத்தகைய முறையே சிறந்ததென டீகோலுக்குத் தோன்றியது. அதனைப் பின்பற்றி அதனையும் விட படு

**சாரணன்**

மோசமான முறையில் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியின் கையிற் குவியக் கூடிய விதத்தில் ஜே ஆர். அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினார். தன்னை ஒரு சிறந்த மூளைசாலி, புத்திஜீவி ஒக்ஸ்வோட் மூளை எனக்கருதும்லலித்திற்கு இதன்உண்மை ஏன் தான் அப்போது புரியவில்லையோ? அந்த ஒக்ஸ்வோட்மூளைக்கு பல விடயங்கள்புரியாது இருந்திருக்கலாம், ஆனால் அந்த அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஜனாதிபதி முறைமை எதேச்சாதிகாரம் நிறைந்தது எனப் புரிய அவ்வளவு நிபுணத்துவம் தேவையில்லை நான் நினைக்கிறேன் அரசியலில் அடியெடுத்து வைக்கும் ஒரு குழந்தைக்குக் கூட அது புரியும்.

அப்படியாயின் 13 வருடங்களின் பின்பு இப்போது லலித் வாய்திறந்திருப்பது ஏன்? அந்த ஜே. ஆரின் எதேச்சதிகாரத்தில் லலித்துக்கும் பங்குகொடுக்கப்பட்டிருந்தது. ஜே. ஆரின் ஆட்சியில் லலித் ஒரு செல்லப் பிள்ளை. அந்தச் செல்லப் பிள்ளைக்கு அப்போது அது, அந்த எதேச்சதிகாரம் சுகமாக இருந்தது. ஆனால் இப்போது...?

இதனை விளக்குவ தற்கு ஜே ஆர் 1989 ஆம் ஆண்டு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறிய ஒரு வாக்கியம் மணிமகுடமாய் அமையும். பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில்:-

"நடப்பு அரசியல் பற்றி நான் ஒன்றும் பேசமாட்டேன். அப்படிப் பேசினால் அடுத்த நிமிடம் என்ன கதி ஏற்படும் என எனக்கே தெரியாது'' என்றார் ஜே. ஆர்.

இது முன்னைநாள் ஜனாதிபதி ஒருவரின் கூற்று. அவர் அந்த ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்திருந்த போது மற்றவர்களுக்கு என்ன செய்திருந்தார் என்பது அவருக்குத் தெரியும். தான் உருவாக்கிய அந்தக் கதிரை அவ்வளவு மோசமானது என்பது அவருக்கு நன்கு புரியும் ஆதலினால் அந்த மோசமான கதிரையில் பிரேமாஇருக்கும்போது தான் முன்பு அந்தக்கதிரையிலிருந்து அசைத்த அதிகாரம் இப்போது தன்னை எப்படிச்சுவைபார்க்கும் என்பது ஜே ஆருக்கு எல்லோரையும் விட நன்கு புரியும்.

இதனை இவ்வாறுதான் வர்ணிக்கலாம், அதாவது ஜே. ஆரும் அவரது பரிவாரமும் உருவாக்கிய அந்தக் கத்தி அவர்களையே கூர்பார்க்கின்றது.

இந்த அரசியல் அமைப்புத் திட்டம் ஜனாதிபதிக்கு மிகவும் சாதகமானது. ஜனாதிபதி நினைத்த மாத்திரத்தில் பாராளுமன்றத்தைத் கலைத்துவிடலாம். ஆனால் இப்போது சபாநாயகரிடம் கையொப்பமிட்ட கடிதம் கொடுக்கப்பட்ட பின்பான சூழலில் பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியாதுள்ளது. இது பிரேமதாசாவின் உளவுத் துறையில் உள்ள குறைபாடுதான் இப்படி ஒரு கடிதம் தயாரிக்கப்படுவதை அறிய முடியாதிருந்தமைதான் இன்றைய சிக்கலுக்குக் காரணம். இப்படி ஒரு கடிதம் தயாரிக்கும் சூழல் உருவாகிறது என முன் கூட்டியே பிரேமா அறிந்திருந்தால் ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி பாராளுமன்றத்தைக் கலைத்திருக்கலாம்.

இப்போது ஒன்றை மட்டும் திட்டவட்டமாகக் கூற முடியும். ஜனாதிபதி முறைமையை எதேச்சாதிகாரம் நிறைந்தது என்பதற்காக இந்த லலித் கூட்டம் அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று கூறவில்லை. மாறாக தமக்கு விருப்பமில்லாத ஒருவர் இந்த அதிகாரம் மிக்க கதிரையில் அமர்ந்திருக்கிறார். எனவே அவரைக் கவிழ்க்க வேண்டும் என்பதற்காகவே. இவர்களை இந்த ஜனாதிபதிக் கதிரையில் ஏறி அமர விட்டால் இந்த ஜனாதிபதி முறைமைதான் உலகத்திற்கே சிறந்தது என்று சொல்வார்கள்.

## 100 சுகாதார பரிசோதகர் வெற்றிடம் நிரப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நூறு சுகாதாரப் பரிசோதகர்களுக்கான (பி எச். ஐ) வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன அண்மையில் சுகாதாரப் பரிசோதகர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன

இப்போது யாழ் மாவட்டத்தில் 70 சுகாதாரப் பரிசோதர்களே சேவையில் உள்ளனர்.

## கழுத்தில் சிறு கயிற்றுடன் அனாதரவாக ஒரு சடலம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி சுடலையை அண்டிய பகுதியில் இனங்காணப்படாத ஒருவரின் சடலம் அனாதரவாக கிடக்க காணப்பட்டது.

கழுத்தில் சிறிய கயிற்றுத் துண்டுஒன்றுடன்காணப்பட்ட இவர் [illegible] இருந்ததாக விடுதலை புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் தெரிவிக்கப்பட்டது.

(லோ)

## வேலணைக் கோட்டத்தில்

## கொர்பசேவ் நம்பிக்கை வாக்குக் கோருகின்றார்

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையின் அவசரக் கூட்டமொன்றில் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோருகின்றார். கடந்தவாரம் தோல்வியில் முடிந்த சதிப் புரட்சிக்குப்பின், கொர்பசேவின் அதிகாரத்துக்கும் நம்பகத் தன்மைக்குமான ஒரு சோதனையாக இது இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

## ஆளும் கூட்டணி உருவாக்கும் கொர்பசேவ் முயற்சி பெரும் பின்னடைவு

(மொஸ்கோ)

சோவியத்யூனியனில் ஆளும் மக்கள் கூட்டணி ஒன்றை உருவாக்க எடுத்த முயற்சியில் ஜனாதிபதி கொர்பசேவ் [illegible] ளாகக் கொண்ட தேசிய பந்தோபஸ்து சபையை அங்கீகரிக்குமாறு கொர்பசேவ்சோவியத் உயர்சபையிடம் முன்னர் கேட்டிருந்தார். ஆனால்

கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட இந்த அரசியல் ஸ்திரணம் தற்போது ஐ. தே. கட்சியில் உள்ள அதிருப்தியாளர்களால்குலைக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசியலில் ஐ. தே. கட்சியின் ஸ்திரணத்தன்மைக்கு வெளியில் இருந்து எவரும் சவால் விடமுடியாது என்ற நிலை இருந்த போது உள்வீட்டு விவகாரம் அதன் ஸ்திரணத்தன்மையைக் குலைத்துள்ளது எனலாம்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை தற்பொழுது தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தின் மூலம், மக்கள் தொடர்பு சாதனங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சிலவேளை வெற்றி கொண்டு விடக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் எதிர்காலத்தில் அவரது அரசியல் வாழ்வு நெருக்கடியற்றதாக இருக்கும் என்று மட்டும் கூறிவிடமுடியாது.

ஐ தே. கட்சி எப்பொழுதும் நகர மக்களின் செல்வாக்கினால் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த கட்சியாகும். அக்கட்சியின் நகர்ப்புறச் செல்வாக்கை 1970 தேர்தலில் ஐ. தே. கட்சி படுதோல்வி அடைந்த போது கொழும்பு நகர்ப்பகுதியில் அது தோல்வி அடையாமையைக்கொண்டு புரிந்து கொள்ளலாம். தற்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் வீடமைப்பு திட்டங்கள் கிராமப்புறத்தில் அவருக்கு செல்வாக்கைத் தேடிக் கொடுத்திருப்பினும், ஜே. வி. பி. இளைஞர்கள் என்ற போர்வையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் அவரது செல்வாக்கைப் பெரிதும் பாதித்துள்ளன.

இந்நிலையில், லலித் அத்துலத் முதலி, பிரேமதாசாவிற்கு எதிராக செயற்படுகல் என்பது நகர்ப்புற குறிப்பாக கொழும்பில் அவரது செல்வாக்கைப் பாதிக்கக் கூடும். கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அதிகூடிய வாக்குவித்தியாசத்தில் லலித் வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையினால் பிரேமதாசாவின் பிரதான வாக்கு வங்கியான கொழும்பு நகர்ப்புறத்தை பெரிதும் பாதிக்கும். தற்பொழுதே கொழும்பு நகர்பகுதியில் சுவரொட்டிப் போரில் இருபகுதியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆகையினால் இன்று சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை அவர் ஏதோ ஒரு வழியில் சமாளித்துக் கொண்டாலும், எதிர்வரும் தேர்தலில் அவரது நிலைமை பெரும் நெருக்கடிக்கு உரியதாகவே இருக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதியால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தேர்தலாகும். கடந்த தேர்தல் பெரும் தில்லு முல்லுகள் இடம் பெற்ற தேர்தலாகும். அத்தோடு சிறிலங்கா அரசின் வளங்கள் யாவும் ஐ. தே. கட்சியின் தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்தப்பட்டன.

இருப்பினும், தற்போதைய ஜனாதிபதி மொத்த வாக்காளர் தொகையில் சுமார் 27 வீதமான வாக்குகளே பெற்றார். அதாவது 73 வீதமான மக்கள் இவரது தெரிவிற்கு ஆதரவு அளிக்கவில்லை. இந்த நிலையில், தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி அவரது வாக்கு வங்கியைச் சீர்குலைத்து விடும் என்பது மட்டும் உண்மை.

இந்தநிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எதிர்கொள்வது சிரமமான காரியமாகவே இருக்கும். தற்பொழுது பிரேமதாசா ஆட்சிக்கு எதிரான அதிருப்தியாளர்களுக்கு சிறிலங்கா அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு உள்ள வரையறையற்ற அதிகாரத்தின் தன்மை நன்கு தெரியும். ஏனெனில், இந்த அரசியல் யாப்பு உருவாகிய போது அதற்குப் பக்கபலமாக இருந்தவர்களே இவர்கள். ஆகையினால் தற்பொழுது தம்மால் உருவாக்கப்பட்ட அரசியல் நெருக்கடியில் இருந்து பிரேமதாசா தப்பித்துக் கொள்ளலாம் என்பதை அவர்களும் முன்னரே புரிந்து கொண்டும் இருக்கலாம். ஆனால் அவர்களின் திட்டத்தில் இன்னும் ஒரு தடவை பிரேமதாசா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை தடுத்து நிறுத்துவது பிரதான இலக்காக கொண்டிருக்கலாம். இதில் அவர்கள் வெற்றியும் பெறலா .

அம்மையார்.

"ஜனாதிபதி முறைமை தனிமனித எதேச்சாதிகாரத்தை உருவாக்குகிறது'' என்று 1978 ஆம் ஆண்டு என். எம். பெரேரா புதிய அரசியல் திட்டத்தைப்பற்றிய விமர்சனப் பார்வை என்ற நூலில் எழுதினார்.

ஆனால் இங்கு விசித்திரம் என்னவென்றால் தான் பதவியில் இல்லாத காலத்தில்தான் தனது ஜனாதிபதி முறைமை பிழையானது என்று ஜே.ஆர். கூறுகின்றமையும், ஜே.ஆர். பதவியில் இருந்தபோது ஜே. ஆரின் ஜனாதிபதி முறை

சிறந்த மூளைசாலி, புத்திஜீவி ஒக்ஸ்வோட் மூளை எனக்கூறும் லலித்திற்கு இதன்உண்மை ஏன் தான் அப்போது புரியவில்லையோ? அந்த ஒக்ஸ்வோட்மூளைக்கு பல விடயங்கள்புரியாது இருந்திருக்கலாம், ஆனால் அந்த அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஜனாதிபதி முறைமை எதேச்சாதிகாரம் நிறைந்தது எனப் புரிய அவ்வளவு நிபுணத்துவம் தேவையில்லை நான் நினைக்கிறேன் அரசியலில் அடியெடுத்து வைக்கும் ஒரு குழந்தைக்குக் கூட அது புரியும்.

அப்படியாயின் 13 வருடங்க

களுக்கு என்ன செய்திருந்தார் என்பது அவருக்குத் தெரியும். தான் உருவாக்கிய அந்தக் கதிரை அவ்வளவு மோசமானது என்பது அவருக்கு நன்கு புரியும் ஆதலினால் அந்த மோசமான கதிரையில் பிரேமாஇருக்கும்போது தான் முன்பு அந்தக்கதிரையிலிருந்து அசைத்த அதிகாரம் இப்போது தன்னை எப்படிச்சுவை பார்க்கும் என்பது ஜே ஆருக்கு எல்லோரையும் விட நன்கு புரியும்.

இதனை இவ்வாறுதான் வர்ணிக்கலாம், அதாவது ஜே. ஆரும் அவரது பரிவாரமும்

யும். ஜனாதிபதி முறைமை எதேச்சாதிகாரம் நிறைந்தது என்பதற்காக இந்த லலித் கூட்டம் அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று கூறவில்லை. மாறாக தமக்கு விருப்பமில்லாத ஒருவர் இந்த அதிகாரம் மிக்க கதிரையில் அமர்ந்திருக்கிறார். எனவே அவரைக் கவிழ்க்க வேண்டும் என்பதற்காகவே. இவர்களை இந்த ஜனாதிபதிக் கதிரையில் ஏறி அமர விட்டால் இந்த ஜனாதிபதி முறைமைதான் உலகத்திற்கே சிறந்தது என்று சொல்வார்கள்.

## 100 சுகாதார பரிசோதகர் வெற்றிடம் நிரப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நூறு சுகாதாரப் பரிசோதகர்களுக்கான (பி எச். ஐ) வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன அண்மையில் சுகாதாரப் பரிசோதகர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன

இப்போது யாழ் மாவட்டத்தில் 70 சுகாதாரப் பரிசோதர்களே சேவையில் உள்ளனர்.

## கொர்பசேவ் நம்பிக்கை வாக்குக் கோருகின்றார்!

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையின் அவசரக் கூட்டமொன்றில் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோருகின்றார். கடந்தவாரம் தோல்வியில் முடிந்த சதிப் புரட்சிக்குப்பின், கொர்பசேவின் அதிகாரத்துக்கும் நம்பகத் தன்மைக்குமான ஒரு சோதனையாக இது இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

## கழுத்தில் சிறு கயிற்றுடன் அனாதரவாக ஒரு சடலம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி சுடலையை அண்டிய பகுதியில் இனங்காணப்படாத ஒருவரின் சடலம் அனாதரவாக கிடக்க காணப்பட்டது.

கழுத்தில் சிறிய கயிற்றுத் துண்டுஒன்றுடன்காணப்பட்ட இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இவரது சடலத்தின் அருகே ஒரு துவிச்சக்கர வண்டியும் காணப்பட்டதாகவும் பின்னர் இத்துவிச்சக்கர வண்டி விடுதலை புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் நீல நிற சாரமும் சாம்பல் நிற சேட்டும் அணிந்திருக்கிறார் இவரது துவிச்சக்கரவண்டி இலக்கம் Cu. 758 ஆகும் பச்சை நிற பை ஒன்றும் சட்டைப்பையில் 50 சதமும் மட்டுமே இவரிடம் இருந்ததாக விடுதலை புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் தெரிவிக்கப்பட்டது.

(லோ)

## வேலணைக் கோட்டத்தில் 31 வெற்றிடம்

(நல்லூர்)

அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களை ஆங்கில ஆசிரியர்களாகநியமிக்கும் திட்டத்தின் கீழ் வேலணைக் கோட்டத்தில் 31 வெற்றிடங்கள் உள்ளன.

மொத்தம் 24 வேலணைக் கோட்டப் பாடசாலையில் 31 ஆங்கில ஆசிரியர்களுக்குவெற்றிடங்கள் உள்ளதாக வேலணைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் புலேந்திரனின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## ஆளும் கூட்டணி உருவாக்கும் கொர்பசேவ் முயற்சி பெரும் பின்னடைவு

(மொஸ்கோ)

சோவியத்யூனியனில் ஆளும் மக்கள் கூட்டணி ஒன்றை உருவாக்க எடுத்த முயற்சியில் ஜனாதிபதி கொர்பசேவ் மிகப் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளார். அங்குள்ள முன்னைய சிரேட்ட ஆலோசகர்களும், பெரஸ்ரொய்கா திட்டத்தை உருவாக்கியவர்களும் உத்தேச தேசிய பந்தோபஸ்து சபையில் சேர மறுப்பு தெரிவித்திருப்பதையடுத்து இம் முயற்சிகள் பாதிக்கப்பட்டன.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஷெவர்நாட்சே, மொஸ்கோ நகரத் மேயர் காபிரியேல் பாப்லோவ் ஆகியோரும் தேசிய பந்தோபஸ்துசபையில் சேர மறுத்தோரில் அடங்குவர். ஒன்பது குடியரசுகளின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தேசிய பந்தோபஸ்து சபையை அங்கீகரிக்குமாறு கொர்பசேவ்சோவியத் உயர்சபையிடம் முன்னர் கேட்டிருந்தார். ஆனால் அத்தலைவர்களின் சம்மதம் பெறாமல் அதனை அங்கீகரிக்க உயர்சபை மறுத்து விட்டது. அத்துடன் சோவியத்தின் பதினைந்து குடியரசுகளின் அதிகாரிகள் நாட்டை ஒன்றுபட்டு ஒருங்கிணைப்பாக பராமரிக்கும் இலட்சியத்துடன் கூடிய பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படுத்தும் உடன்பாடு பற்றி ஆலோசித்து வருகிறார்கள்.

## தனங்கிளப்பில் வயோதிபரின் சயிக்கிள், பொருள் திருட்டு

ஈச்சமோட்டை)

தளங்கிளப்பு பகுதியில் கடை ஒன்றில் தேநீர் அருந்தச் சென்ற வயோதிபரின் பொருள்களும், சயிக்கிலும் திருடப்பட்டுள்ளன.

வவுனியாவிற்குச் சென்று திரும்பி வரும்போது புதிதாக இந்த புதிய 'ஏசியா' சயிக்கிலையும், சில பொருள்களையும் வாங்கி வந்தவர் இடை நடுவில் தளங்கிளப்பு பகுதியை அண்மித்தபோது தலைக்கிறுதி வந்ததால் சயிக்கிலை தேநீர்க் கடையின் வெளியே நிறுத்திவிட்டு தேநீர் அருந்துவதற்காக உள்ளே சென்றார். திரும்பி வந்துபார்த்த போது சைக்கிலும் பொருள்களும் அபேஸ் பண்ணப்பட்டிருந்ததையிட்டு திகைத்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

(43)

## இந்தியாவிற்கு 282கோடி டொலர் உதவி

(டில்லி)

சர்வதேச நாணய நிதியம் இந்தியாவுக்கு 282 கோடி அமெரிக்க டொலரை கடனாக வழங்க தீர்மானித்துள்ளது என''டைம்ஸ் ஒவ் இந்தியா''என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

## எலும்புக் கூடாக மீட்பு

(அரியாலை)

கௌதாரி முனைக்கு அண்மையில் உள்ள மாந்தீவு என்ற இடத்தில் மனித எலும்புக் கூடு ஒன்று அப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்களால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

இவ் எலும்புக்கூடு 1985 ஆம் ஆண்டு காணாமற் போன சுப்பிரமணியம் கைலாயபிள்ளை என்பவரது என்று இந்த எலும்புக்கூட்டுடன் காணப்பட்ட ஆடையின் மூலம் இனம் காணப்பட்டது. (71)

# தேசியப்படை பலத்துடனும் தென்புடனும்எழுந்துநிற்கிறது

— அரசண்ணா

(வடமராட்சி)

''தமிழீழ தேசம் இன்னமும் முற்றுமுழுதாக மீட்கப்பட வில்லையே தவிர தமிழீழத் தேசியப் படை மென்மேலும் பலத்துடனும், தென்புடனும் வளர்ந்து எழுந்து நிற்பதனை ஆனையிறவுப் போரின் மூலம் எதிரிக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துஇயம்பி இருக்கின்றோம். இப்படை என்றோ ஒரு நாள் தமிழீழ மண்ணை மீட்டெடுத்தே தீரும்''

இவ்வாறு ஆனையிறவில் வீரமரணமடைந்த வீர வேங்கை நிசாவின் 45 ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு வடமராட்சி மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. சு. அரசண்ணா உரையாற்றினார்.

புலோலிசிங்கைநகரில் நடைபெற்ற இந்த அஞ்சலிக்கூட்டத்திற்கு திரு. தங்கவேலு தலைமைவகித்தார். திரு. அரசண்ணா தொடர்ந்து பேசுகையில்,

''இராணுவத்தீர்வின்மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்என்ற நம்பிக்கை கொண்டிருந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதிகளுக்கு இந்த ஆனையிறவுப் போர் ஓர் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றது.

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழர்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் இல்லை என்று கூறிய சிங்கள பௌத்த பேரினவாத அரசு இந்த நாட்டில் இரு தேசியப்படைகள் மோதிக்கொள்கின்றன என்ற மகத்தான உண்மையை ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு இப்போர் வழிசெய்திருக்கின்றது. இவ்வெற்றிக்கு வித்தான நிசா முதலான இவ்வீர வேங்கைகளின் ஆயுதங்களை எடுத்துப் போராட அனைவரும் அணிதிரள வேண்டும்'' என்றார்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சந்திரிக்கா, பாஸ்கரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (18)

## கல்வித் திணைக்களம்,கிளிநொச்சி

## கேள்வி அறிவித்தல்

### கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான மரத் தளபாடங்கள் வழங்குதல்

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள மரத் தளபாடங்களை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள்,மரத்தளபாட உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்களிடமிருந்து 20-09-1991 ஆம் திகதி காலை 10.00 மணி வரை கிளிநொச்சி கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தயாரிப்பாளர்கள்/விநியோகஸ்தர்கள்/ ஒவ்வோர் தளபாடங்களுக்குமாக தனித்தனியே அவற்றின் கூறுவிலைகளையும்,ஒவ்வோர் கொத்தணிப் பாடசாலைகளுக்குக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஏற்றுக்கூலி உட்பட அவற்றுக்கான கூறுவிலைகளையும்வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட கொத்தணிப் பாடசாலைகள்:-

1. கிளிநொச்சி கொத்தணி
2. பரந்தன் கொத்தணி
3. பூநகரி கொத்தணி
4. வட்டக்கச்சி கொத்தணி
5. முரசுமோட்டை கொத்தணி
6. பளை கொத்தணி
7. முழங்காவில் கொத்தணி
8. அக்கராயன் கொத்தணி
9. உருத்திரபுரம் கொத்தணி

இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் (இணைப் பிரதிகளில்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் 'பாடசாலைத் தளபாடங்களுக்கான கேள்விகள்' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விபரக்கூற்றுக்கள் ஆகியவைகளை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 50/-உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 200/-உம்கிளிநொச்சி பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் கிளிநொச்சி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கொடுப்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விசேட பயிற்சி பெறாத உடற்கல்வி ஆசிரியர்களுக்கு இம்மாதம் ஒன்பதாம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற இருக்கின்றது.

இக்கருத்தரங்கை யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவு ஒழுங்கு செய்துள்ளது விசேட பயிற்சி பெறாத சகல உடற்கல்வி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்

## காணவில்லை

உயிலங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்து வயது நிரம்பிய சி. ரூபராசன் (ரூபன்) எனும் சிறுவன் 1991-08-31 அன்று பி. ப. 5-00 மணியளவில் நல்லூர் உற்சவ நேரத்தில் காணாமல் போயுள்ளார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் உடனடியாக நல்லூர்செட்டித் தெருவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் தொடர்பகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

## கடமைக்குத் திரும்பவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தனில் உள்ள மக்கள் வங்கிக் கிளை கரடிப் போக்குச் சந்திக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருக்கிறது.

எனவே சகல ஊழியர்களும் உடனடியாக கடமைக்குத் திரும்பும்படி பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

தாண்டிக்குளத்தில்

கெடுத்த பின் அவர்களைப் பலமாகத் தாக்கியுள்ளனர்.

இதே வேளை, நேற்று முன்தினம் தாண்டிக்குளம் பாதையால் பொது மக்களை வர வேண்டாம் எனக் கூறிய இராணுவத்தினர் நேற்றுக் காலை அப்பாதையில் வந்த பொது மக்களை ஆறு லொறிகளில் ஏற்றி மன்னார்ப்பக்கமாக கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

பாராளுமன்றக்

கல் செய்யத் தூண்டிவிட்டன என்றும் அத்துலத்முதலி கூறினார்.

காத்தான்குடியில்

மாலை ஆறு மணியளவில் நடந்த இச் சம்பவத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் இருபத்தைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது கட்டடங்கள் அதிகமாக உள்ள பகுதியில் வெள்ளைநிறமான ஹைஏஸ் வானொன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு தான் வெடித்ததாக உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்கா புவத் கூறியது.

முகமாலைவிற்கு

பெற்றது. அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வினோத் அவர்களும் கடாபி மாஸ்ரர் அவர்களும் உரையாற்றினார்கள். இதன் பின்னர் இவரது புகழுடலுக்கு பெருந்திரளான மக்கள் வந்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். அஞ்சலியுரை முடிந்த பின்னர் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்தில்

இராணுவம், புளொட் குழுவினரால்

## பாலியல் வன்முறைகளும் கட்டாயத் திருமணங்களும்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் புளொட் குழுவினராலும், இராணுவத்தினராலும் தமிழ் பெண்கள் பலர் பாலியல்வன்முறைக்குள்ளாக்கப் பட்டுள்ள துடன், புளொட்குழுவினரால் ஏழு தமிழ்ப் பெண்கள் கட்டாய திருமணத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தாண்டிக்குளம் தடை முகாம் பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைதாகும் பெண்களும், வியாபாரத்திற்காகச் சாந்தசோலையில் தங்கும் பெண்களுமே இவ்வாறு வன்முறைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த நான்கு நாட்களாகச் சந்தேகத்தின் பேரில் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனவும், இவர்களில் இருபது தமிழ்ப் பெண்களைப் புளொட் குழுவினர் திருமணம் செய்துள்ளதாகவும் இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டுவனில்

ரவு பன்னிரண்டு மணியளவில் இராணுவத்தினர் மாவிட்டபுரம் பகுதியிலுள்ள தமது காவலரணைப் பலப்படுத்த முயன்றபோது புலிகள் மீண்டும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

ஐ. தே. கட்சியை

கட்சியைப் பாதுகாப்பதே இப்போராட்டத்தின் நோக்கம். எனவே போராட்டத்தில் இணைய யாவரும் முன்வர வேண்டும். எவரும் அஞ்சத் தேவையில்லை. பயந்து வாழ்ந்தகாலம் மலையேறிவிட்டது என்றும் கூறினார்.

பாதுகாப்பு வேண்டும்

படைத்தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது பற்றி அத்துலத்முதலி கூறுகையில் ஜனாதிபதியேமுப்படைத் தளபதி. அரசியல் அமைப்பிற்கு ஏற்ப படைத் தளபதிகள் செயற்படுவது அவசியம். இந்நிலையில் அவர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தது சரியே. ஆனால் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் எனக்கும் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் அத்துலத்முதலி கூறினார்.

தனிமனித ஆட்சி

இப் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் காமினி திஸநாயக்கா கூறியதாவது தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியில் கடந்த இரண்டரை வருடகாலமாக ஐ. தே. கட்சியின் கொள்கைக்கு மாற்றமாக காரியங்கள் நடக்கின்றன. ''தனிமனித ஆட்சியே'' காணப்படுகிறது. தற்போதைய ஜனாதிபதியே தனிமனித ஆட்சிபற்றி பகிரங்கமாகக் கூறியுள்ளார்

எனவே ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க நாம் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடப் போகிறோம். ஆனால் சிறிலங்கா அரசியல் அமைப்பிற்கு எதிராக ஒருபோதும் செயல் படமாட்டோம் என்று கூறினார்.

சுதந்திரம் கிடையாது

தற்போதைய ஆட்சிக்காலத்தில் மந்திரி சபையிலோ

திருமலையில்

தாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழனன்று மூதூர், சம்பூர், கட்டைபறிச்சான், கூனித்தீவு ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த போதே சிறிலங்கா இராணுவத்தினர் சேனையூர் ஆறாமவாட்டைச் சேர்ந்த முருகுப்பிள்ளை தியாகராஜா (வயது38), சின்னராஜா பாஸ்கரன் (வயது 27), இராசரட்னம் நாகராஜா, கணேசலிங்கம் ஜெயராஜ் (வயது 26), முத்துக்குமாரு நாகராஜா (வயது 3? இலக்கந்தை) ஆகியோரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளதுடன் பொதுமக்களின் வீடுகளையும், உழவு இயந்திரங்களையும் நாசமாக்கியுள்ளனர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தயாரிப்பாளர்கள்/விநியோகஸ்தர்கள்/ ஒவ்வோர் தள பாடங்களுக்குமாக தனித்தனியே அவற்றின் கூறுவிலைகளையும்,ஒவ்வோர் கொத்தணிப் பாடசாலைகளுக்குக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஏற்றுக்கூலி உட்பட அவற்றுக்கான கூறுவிலைகளையும்வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட கொத்தணிப் பாடசாலைகள்:-

1. கிளிநொச்சி கொத்தணி
2. பரந்தன் கொத்தணி
3. பூநகரி கொத்தணி
4. வட்டக்கச்சி கொத்தணி
5. முரசுமோட்டை கொத்தணி
6. பளை கொத்தணி
7. முழங்காவில் கொத்தணி
8. அக்கராயன் கொத்தணி
9. உருத்திரபுரம் கொத்தணி

இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் (இணைப் பிரதிகளில்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் 'பாடசாலைத் தளபாடங்களுக்கான கேள்விகள்' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விபரக்கூற்றுக்கள் ஆகியவைகளை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 50/-உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 200/-உம்கிளிநொச்சி பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் கிளிநொச்சி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாக 16-09-1991 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினை [பொது 172] சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

## தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம்:.

(அ) ஆசிரியர் மேசை
(ஆ) ஆசிரியர் கதிரை
(இ) அதிபர் மேசை
(ஈ) கரும்பலகை (தாங்கியுடன்)
(உ) ராக்கை
(ஊ) கண்ணாடி அலுமாரி
(எ) கட்டில்
(ஏ) நூலக அறை மேசை
(ஐ) ஸ்ரூல்

க. கந்தசாமி,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி.
01-09-1991

(B/ 3037)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொண்டிருந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதிகளுக்கு இந்த ஆனையிறவுப் போர் ஓர் எச்சரிக்கையாக அமைந்திருக்கின்றது.

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழர்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் இல்லை என்று கூறிய சிங்கள பௌத்த பேரினவாத அரசு இந்த நாட்டில் இரு தேசியப்படைகள் மோதிக்கொள்கின்றன என்ற மகத்தான உண்மையை ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு இப்போர் வழிசெய்திருக்கின்றது. இவ்வெற்றிக்கு வித்தான நிசா முதலான இவ்வீர வேங்கைகளின் ஆயுதங்களை எடுத்துப் 'போராட அனைவரும் அணிதிரள வேண்டும்'' என்றார்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் சந்திரிக்கா, பாஸ்கரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (18)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விசேட பயிற்சி பெறாத உடற்கல்வி ஆசிரியர்களுக்கு இம்மாதம் ஒன்பதாம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் யாழ். கனகரட்ணம் மந்திய மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற இருக்கின்றது.

இக்கருத்தரங்கை யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்விப் பிரிவு ஒழுங்கு செய்துள்ளது விசேட பயிற்சி பெறாத சகல உடற்கல்வி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டப்பட்டிருக்கிறார்கள். இறுதி நாளன்று கல்விப் பணிப்பாளர் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்குவார்.

**ஊரடங்கு**
களும் போக்குவரத்திற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**வன்முறையை**
முதலி தமக்கு நாற்பத்திமூன்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

**இனப்பிரச்சினை**
ஆகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த விடயத்தில் நிதானமாகவே செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**ஜே. ஆர்**
முறை என்றும்,
1970 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தோற்றதன் பின்னர் எதிர்க்கட்சியில் இருந்த ஜே. ஆர் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த இத்தகைய ஆட்சி முறையை ஏற்படுத்தினார் என்றும் தெரிவித்தார்.

தினம் தாண்டிக்குளம் பாதையால் பொது மக்களை வர வேண்டாம் எனக் கூறிய இராணுவத்தினர் நேற்றுக் காலை அப்பாதையில் வந்த பொது மக்களை ஆறு லொறிகளில் ஏற்றி மன்னார்ப்பக்கமாக கொண்டு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

**பாராளுமன்றக்**
கல் செய்யத் தூண்டிவிட்டன என்றும் அத்துலத்முதலி கூறினார்.

**காத்தான்குடியில்**
மாலை ஆறு மணியளவில் நடந்த இச் சம்பவத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் இருபத்தைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது கட்டடங்கள் அதிகமாக உள்ள பகுதியில் வெள்ளைநிறமான ஹைஏஸ் வானொன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு தான் வெடித்ததாக உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்காபுவத் கூறியது.

**முகமதுவிற்கு**
பெற்றது. அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வினோத் அவர்களும் கடாபி மாஸ்ரர் அவர்களும் உரையாற்றினார்கள். இதன் பின்னர் இவரது புகழுடலுக்கு பெருந்திரளான மக்கள் வந்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். அஞ்சலியுரை முடிந்த பின்னர் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது. (86)

**புலிகளுக்கு**
ம்பு சர்வதேச சேவையிலும் முழுமையாக பதில் அறிக்கைகள் விடப்படுகின்றன என்றும் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

**வடமேல்**
விக்கிரம பெரேரா இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தார். பின்னர் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மேலும்**
இப்போது இவருடன் மொத்தம் நான்கு அமைச்சர்கள் இராஜினாமாச் செய்துள்ளார்கள்.

**பிரேரணை**
கைச்சாத்திட்டுள்ளனர் என்றார்.

**அ. கா. சட்டர்**
**நீடிப்பு தோற்கும்**
இதேவேளை அனுரா பண்டாரநாயக்கா தமது கருத்தைக் கூறுகையில், 40 க்கும் மேற்பட்ட ஆளும்கட்சி எம்பிக்கள் மனுவில் கையெழுத்திட்டு இருப்பதால் அடுத்த அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணை சபையில் தோல்வி காணும் என்றார்

**பாதுகாப்பு வேண்டும்**
படைத்தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது பற்றி அத்துலத்முதலி கூறுகையில் ஜனாதிபதியே முப்படைத் தளபதி: அரசியல் அமைப்பிற்கு ஏற்ப படைத் தளபதிகள் செயற்படுவது அவசியம். இந்நிலையில் அவர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தது சரியே. ஆனால் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் எனக்கும் மற்றும் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் அத்துலத்முதலி கூறினார்.

**தனிமனித ஆட்சி**
இப் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் காமினி திஸநாயக்கா கூறியதாவது தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியில் கடந்த இரண்டரை வருடகாலமாக ஐ. தே கட்சியின் கொள்கைக்கு மாற்றமாக காரியங்கள் நடக்கின்றன. ''தனிமனித ஆட்சியே'' காணப்படுகிறது. தற்போதைய ஜனாதிபதியே தனிமனித ஆட்சிபற்றி பகிரங்கமாகக் கூறியுள்ளார்

எனவே ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுக்க நாம் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடப் போகிறோம். ஆனால் சிறிலங்கா அரசியல் அமைப்பிற்கு எதிராக ஒருபோதும் செயல்படமாட்டோம் என்று கூறினார்.

**சுதந்திரம் கிடையாது**
தற்போதைய ஆட்சிக்காலத்தில் மந்திரி சபையிலோ பாராளுமன்ற குழுவிலோ சுதந்திரமாக வாதாட முடியாது. கருத்துக்களைவெளியிடவும் வாய்ப்பில்லை என்றும், தற்போதைய ஜனாதிபதிபிரதமராக இருந்தபோது இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து வாதிட்டார். அப்போது அப்படிச் செய்ய அவருக்கு உரிமை இருந்தது. ஆனால் இப்போது அவருடைய ஆட்சிக்காலத்தில் அப்படிச் செய்ய சுதந்திரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

**லாயக்கற்றவர்கள்**
இவர்கள் இருவருடனும் தமது தொழில் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த ஜி. எம். பிரேமச்சந்திர கருத்துக் கூறுகையில் நாம் சுயமாகவே போராட்டத்தில் குதிக்கிறோம். யாரும் எம்மைப் பலவந்தப்படுத்தவில்லை. ஜனாதிபதிக்கு எதிராக மனுவில் கைச்சாத்திட்டோர் நன்றாக மனுவை வாசித்துவிட்டே கைச்சாத்திட்டனர். வாசிக்காமல் கையெழுத்திட்டோம் என்று இப்பொழுது யாராவது கூறினால் அது பச்சைப்பொய். அப்படிக் கூறுவோர் எம். பி. பதவிக்கே லாயக்கற்றவர்கள் என்றார்.

**திருமலையில்**
தாகத் தெரியவருகிறது.

கடந்த வியாழனன்று மூதூர், சம்பூர், கட்டைபறிச்சான், கூனித்தீவு ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்தபோதே சிறிலங்கா இராணுவத்தினர் சேனையூர் ஆறாம் வாட்டைச் சேர்ந்த முருகுப்பிள்ளை தியாகராஜா (வயது38), சின்னராஜா பாஸ்கரன் (வயது 27), இராசரட்ணம் நாகராஜா, கணேசலிங்கம் ஜெயராஜ் (வயது 26), முத்துக்குமாரு நாகராஜா (வயது 3? இலக்கந்தை) ஆகியோரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளதுடன் பொதுமக்களின் வீடுகளையும், உழவு இயந்திரங்களையும் நாசமாக்கியுள்ளனர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



## வீரவேங்கை கொலின்ஸ்

(சண்முகானந்தம் மணிவண்ணன்)
(காந்தி)

வீரஜனனம் 1972-01-18 வீரமரணம் 1991 07-20

ஈழ மண்ணை மீட்பதற்கு உன்னுடன் இன்னும் தோழமை கொண்டுள்ளோம் காண்.

இவருடன் இணைந்து வீர மரணமடைந்த ஏனையோர்க்கும் எமது வீரவணக்கங்கள் பல.

- சகபோராளிகள்
மயிலிட்டி.

(B/3045)